A T A

# ஆஸ்திரேலியத் தமிழ்க் கலாசாலை

# வளர்நிலை-1

## தமிழ்ப் பாடநூல்

ஆஸ்திரேலிய விக்டோரிய அவசியக் கல்வித்திட்ட வரையறைக்குட்பட்டது.







அயலகத் தமிழர்களுக்கான

மரபுசார் தமிழ்க்கல்வி

AUSTRALIAN TAMIL ACADEMY

Culture Based Tamil Education© for Diaspora

Australian Victorian Essential Learning Standards (AusVELS)



எனை ஈன்றுமுதாட்டிய அன்னை

விரல்பிடித்து வழிகாட்டிய தந்தை

நெறிபடுத்திய ஆசிரியர்

பாதங்களுக்கு சமர்ப்பணம்...

நாகை. கா. சுகுமாரன்

# தமிழ்ப் பாடநூல் - வளர்நிலை-1

ஆண்டு 2014 - 2015

AUSTRALIAN TAMIL ACADEMY

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக

தமிழ் எங்கள் உயிருக்கு நேர்

**ஆஸ்திரேலிய தமிழ்க் கலாசாலை**

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

மரபுசார்த் தமிழ்க்கல்வி பாடநூல்

## நன்றிக்குரியவர்கள்

திரு. தமிழருவி மணியன், தலைவர், காந்திய மக்கள் இயக்கம்.

முனைவர் மு. பொன்னவைக்கோ, துணைவேந்தர், SRM பல்கலைக்கழகம்.

முனைவர் ப. அர. நக்கீரன், இயக்குனர், தமிழ் இணையக் கல்விக்கழகம்.

திரு. இல. சுந்தரம், துணைப்பேராசிரியர், SRM பல்கலைக்கழகம்.

தமிழுக்குத் தொண்டாற்றியத் தரணிவாழ்த் தமிழார்வலர்கள்.

புத்தக ஆக்கத்திற்கு ஊக்கமளித்தத் தோழர்கள், உறவினர்கள்.

அழகுற அச்சுப்பதித்த அச்சகத்தார்.

மரபுசார் தமிழ்க் கல்வி
பதிப்புரிமை : மைக்குறி வெளியீடு (Inkmark Publications, Australia)
முதற்பதிப்பு - 2014

நூலாக்கம் : நாகை. கா. சுகுமாரன்
தலைவர்
வள்ளுவர் அறக்கட்டளை
ஆஸ்திரேலியா

கணினி வடிவமைப்பு: நாகை. கா. சுகுமாரன்

ஆலோசனை : திருமதி ஜெகதீஸ்வரி காளிமுத்து, Dr. புவனேஸ்வரி சுகுமாரன், திருமதி கமலவல்லி சுகுமாரன், திருமதி கற்பகவல்லி சுரேஷ், திரு கார்த்திகேயன் சுகுமாரன்.

இளம் தமிழ்ச் சமுதாயம், தமிழ்ப் பண்பாட்டையுணர்ந்து தங்கள் வாழ்வில் மேன்மையுற உதவியாக இருக்கும் வகையில் இந்தப்பாடங்களைத் தொகுத்துள்ளோம். தமிழ்ச் சமுதாய முன்னேற்றத்திற்காக, இலாப நோக்கற்று எழுதப்பட்ட இந்தப் பாடங்களில் பல நூறு உலக அறிஞர்களின் ஆக்கங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. அவையெல்லாம் அந்தந்த அறிஞர்களுக்கே சொந்தமானவை. நாங்கள் உரிமை கோரவில்லை.

எனினும் அவற்றைப் பயன்படுத்துவதில் ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் தயைகூர்ந்து எங்களுக்குத் தெரிவியுங்கள். அந்தக்குறிப்பை அல்லது படத்தை அடுத்தப்பதிப்பில் நீக்கிவிடுகின்றோம்.

இப்புத்தகம் பதிப்புரிமைச் சட்டத்தினால் பாதுகாக்கப்பட்டுள்ளது.

## தமிழ்த்தாய் வாழ்த்து



நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெரும் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம்வியந்து
செயல் மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!



மனோன்மணீயம் பெ. சுந்தரனார்.

## இன்பத்தமிழ்

தமிழுக்கும் அமுதென்று பேர் ! அந்தத்
தமிழ் இன்பத் தமிழ்எங்கள் உயிருக்கு நேர் !
தமிழுக்கு நிலவென்றுபேர் ! இன்பத்
தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர் !
தமிழுக்கு மணமென்று பேர் ! இன்பத்
தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர் !
தமிழுக்கு மதுவென்று பேர் ! இன்பத்
தமிழ் எங்கள் உரிமைச்செம் பயிருக்கு வேர் !

தமிழ் எங்கள் இளமைக்கு பால் ! இன்பத்
தமிழ் நல்ல புகழ்மிக்க புலவர்க்கு வேல் !
தமிழ் எங்கள் உயர்வுக்கு வான் ! இன்பத்
தமிழ் எங்கள் அசதிக்குச் சுடர்தந்த தேன் !
தமிழ் எங்கள் அறிவுக்குத் தோள் ! இன்பத்
தமிழ் எங்கள் கவிதைக்கு வயிரத்தின் வாள் !
தமிழ் எங்கள் பிறவிக்குத் தாய் ! இன்பத்
தமிழ் எங்கள் வலமிக்க உளமுற்ற தீ !



புரட்சிக்கவி பாரதிதாசன்

# நோக்கம்

அயலகத்தில் வசிக்கும் நம் குழந்தைகள் நம்முடன் சரளமாகத் தமிழில் பேசி, நம் பண்பாட்டையும், தாய் மொழியின் சிறப்பையும் உணர்ந்து மகிழவேண்டும் என்ற ஆசை எல்லாப் பெற்றோர்களுக்கும் இருக்கிறது.

அந்த நோக்கத்தை நிறைவேற்ற பல கல்வி நிறுவனங்கள் வார விடுமுறை நாட்களில் தமிழ் வகுப்புகளை நடத்தி வருகின்றன. இவ்வகுப்புகளுக்குச் சரியான பாடங்களைக் கொண்டப் புத்தகங்கள்தான் இன்றைய அவசியத்தேவை..

மேலும் அவை மிகக்குறுகிய காலத்தில் கற்பிக்க விழையும் ஆசிரியருக்குத்-துணையாக இருக்கவேண்டும். தாய்த்தமிழ் நாட்டைக் காணாமலே வாழும் மாணவர்கள்கூட தமிழ் மொழியின் சிறப்பையும் தமிழரின் பண்பாட்டு மேன்மையையும் நன்கு உணரக்கூடிய வகையிலும், இரசித்து மகிழக்கூடிய வகையிலும் பாடங்கள் இருக்கவேண்டும். தாய்மொழியைக் குழந்தைகள் ஆர்வத்துடன் கற்றுக்கொள்ளும் வகையில் பாடத்திட்டம் வடிவமைக்கப்படவேண்டும்.

வெறும் ஏட்டுக்கல்வி மட்டும் தராமல் பாடப்பொருளின் பின்னணியில் உள்ள உணர்வுப்பூர்வப் பண்பாட்டு நிகழ்வுகளையும் மாணவர்களுக்கு அறியத்தரும் போது அவர்கள் கற்கும் திறன் அதிகரிக்கிறது. இவையனைத்தையும் தன்னகத்தே கொண்டு மரபுசார்த் தமிழ்க் கல்வி என்ற ஒரு புதிய கல்வித்திட்டம் வடிவமைக்கப்பட்டது.

என் ஆசிரியர்ப் பணியில் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் என்ற முக்கோண வலைப்பின்னலில் கிடைத்த இந்த அனுபவங்களால் பிறந்தது தான் மரபுசார்த் தமிழ்க் கல்வித்திட்டம்.

இக்கல்வித்திட்டத்தில் உள்ள தமிழ்ப் பாடங்களும், கற்கும், கற்பிக்கும் முறைகளும் அயலகத்தில் வசிக்கும் மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் உள்ளன என்பது அனுபவ உண்மை. மேலும் இவை ஆசிரியரின் சுமைகளை எளிதாக்குகின்றன என்பதிலும் ஐயமில்லை.

இக்கல்வித்திட்டத்தின் மூலமாக அன்பு, உடல்நலம், தன்னொழுக்கம், சுற்றுப்புறச் சூழ்நிலையில் அக்கறை, மனிதநேயம், நாட்டுப்பற்று, குடும்பப்பற்று ஆகிய எல்லா வற்றையும் பற்றி தாய் மொழி வழியாக எளிதில் கற்றறியும் வகையில் பாடங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

தமிழர்களின் கலை, இலக்கியப்பண்பாட்டுடன் இணைந்த தமிழ் கல்வியில், ஆஸ்திரேலிய அரசாங்கத்தின் கல்வித்திட்டமான AusVELS எனப்படும் ஆஸ்திரேலிய, விக்டோரிய அவசியக் கல்வித்திட்ட வரையறைக்கு உட்பட்டு பாடங்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

நன்றி
நாகை. கா. சுகுமாரன்
நிறுவனர்
வள்ளுவர் அறக்கட்டளை
web: www.valluvarfoundation.org
email: valluvarfoundation@gmail.com
+61 434 013 993

# தமிழ்ப் பாடநூல் - வளர்நிலை-1

ஆண்டு 2014 - 2015

## மாணாக்கர் உறுதி மொழி

என் பெற்றோரைப் பெரிதும் போற்றி வாழ்ந்திடுவேன்.
என் தாய் மொழியை மறக்கமாட்டேன்.
என் ஆசிரியரை மதித்து நடப்பேன்.
கல்விதான் உலகில் சிறந்தது.
கல்விதான் என்னுடைய சக்தி.
நான் கற்ற செம்மொழித்தமிழை
மற்றவருக்குச் சொல்லிக் கொடுப்பேன்.
செம்மொழித்தமிழையும், தாய் நாட்டையும்,
இயற்கையையும் மதித்து நடப்பேன்.
குடும்பப்பற்று, நாட்டுப்பற்று, உண்மை, உழைப்பு,
உதவி, நேர்மை இவைகளைக் கடைபிடிப்பேன் என்று
நான் உறுதி கூறுகிறேன்.

AUSTRALIAN TAMIL ACADEMY

தமிழ் எங்கள் உயிருக்கு நேர்

ஆஸ்திரேலிய தமிழ்க் கலாசாலை

என் பெயர்: ______________________

செல்லப் பெயர்: ______________________

வகுப்பு: ______________________

## பொருளடக்கம்

தமிழ்த்தாய் வாழ்த்து இன்பத்தமிழ் ........................ 5
நோக்கம் ---------------------------------------------------------- 6
மாணவர் உறுதி மொழி ------------------------------------------ 7
பண்பாடு ---------------------------------------------------------- 9
என் அம்மா பாடல் ---------------------------------------------- 10
என் அப்பா பாடல் ---------------------------------------------- 11
வரைந்து காட்டுவோம்----------------------------------------- 12
சான்றோர்கள் -------------------------------------------------- 13
உயிர் எழுத்துக்கள் ------------------------------------------ 14
உயிர்மெய் எழுத்துக்கள் ------------------------------------ 15
எழுத்துக்களின் அட்டவணை ------------------------------- 16
உயிர்மெய் எழுத்து - திருக்குறள் ------------------------- 17
உயிர் எழுத்துக்கள் சொற்கள் -------------------------- 18-23
எங்கள் மொழி - திருக்குறள் ----------------------------- 24-25
ஓடி விளையாடு ---------------------------------------------- 26
எழுத்தின் தோற்றம் எழுதிப்பழகு 1---------------------- 27
வெள்ளைப்பசு ----------------------------------------------- 28
சுட்டும் சொற்களை அறிவோம் ----------------------------- 29
ஒற்றுமையே வெற்றி தரும் ---------------------------- 30-31
உடல் உறுப்புகள் -------------------------------------------- 32
வினைச்சொல்லும் பொருளும் ------------------------------- 33
ஒன்றாய் கூடி வாழ்ந்திடுவோம் ------------------------- 34-35
சுவைகள் ------------------------------------------------- 36-37
வானவில் --------------------------------------------------- 38
வினாச்சொற்கள் -------------------------------------------- 39
மரங்கள் ---------------------------------------------------- 40
காடு ------------------------------------------------------- 41
உயிரினங்கள் ------------------------------------------ 42-43
கடிகாரம் - எண்கள் ------------------------------------------ 44
வனவிலங்குப் பூங்கா ---------------------------------------- 45
திசைகள் --------------------------------------------------- 46
நாளும் பொழுதும் -------------------------------------------- 47
ஏவற்சொற்கள் ---------------------------------------------- 48
வாரநாட்கள் ----------------------------------------------- 49
மரம் வளர்ப்போம் ------------------------------------------- 50
சொல் விளையாட்டு ------------------------------------------- 51
மாதங்கள் -------------------------------------------------- 52
பருவங்கள் ------------------------------------------------- 53
உயிர் எழுத்துகள் எழுதிப்பழகு ------------------------- 54-59
உயிர்மெய் எழுத்துக்கள் எழுதிப்பழகு ----------------- 60-69
ஆதரிக்க வேண்டும் ------------------------------------------ 70
இன்பமாக உண்ணலாம் ---------------------------------------- 71

# பண்பாடு



நாம் மற்றவரை சந்திக்கும்போது வணக்கம் என்று கூறவேண்டும். வணக்கம் என்று சொல்லுவது தமிழரின் மரபு.

காலை, மதியம், மாலை, இரவு ஆகிய எந்த நேரத்திலும் வணக்கம் என்று கூறி வணங்கலாம்

நண்பர்களை வணங்கும்போது இரண்டு கைகளையும் இதயத்தின் முன் கூப்பி சிரம் தாழ்த்தி வணங்க வேண்டும்.

இதயத்தின் முன் கைகூப்புவதால் அன்பாகவும், சிரம் தாழ்த்துவதால் பணிவுடனும் வரவேற்கின்றோம் என்று பொருள்.

நம் பெற்றோரை முகத்தின் முன் இரண்டு கைகளையும் கூப்பி வணங்கவேண்டும்.

நம் சிந்தனையைத் தூண்டி நம்மைச் சிந்திக்கவைத்த குருவை நெற்றிக்கு நேர் இரண்டு கைகளையும் கூப்பி வணங்கவேண்டும்.

இறைவனை வணங்கும்போது இரண்டு கைகளையும் கூப்பி தலைக்கு மேல் உயர்த்தி வணங்க வேண்டும் என்று சான்றோர்கள் கூறுவார்கள்.

கரம் | சிரம்

தமிழர் | மரபு

வணங்கு

பணிவு

பண்பாடு



கரம் : கை

சிரம் : தலை

கூப்பி : குவித்து

மரபு : தொன்றுதொட்டு கடைபிடிக்கப்படும் முறை.

சான்றோர்கள் : அறிவில் சிறந்த ஒழுக்கமுடையவர்கள்.

# என் அம்மா

அம்மா அம்மா என் அம்மா !
அன்பாய் முத்தம் தந்திடுவாய் !
கண்ணைப் போல என்னையும்,
கனிவாய் நீயும் காத்திடுவாய் !
பாலும் சோறும் ஊட்டிடுவாய் !
பண்பைச் சொல்லித் தந்திடுவாய் !
பரிவுடன் என்னைப் பேணிவரும்,
பாரில் சிறந்தவள் நீயம்மா !

சொல்லும் பொருளும்:

அன்பு பண்பு

பால் சோறு கனிவு பரிவு



பண்பு : குணம்
பரிவு : பாசம்
பார் : உலகம்
பேணி : காப்பாற்றி
தெய்வம் : கடவுள்



முன்னறி : நம் முன்னால் இருக்கின்ற

# என் அப்பா

அப்பா அப்பா என் அப்பா !
அறிவைப் புகட்டி வளர்த்திடுவாய் !
துள்ளியே ஆடும் என்னையும்,
பள்ளிக்கு அழைத்துச் சென்றிடுவாய் !
உண்மை பேசச் சொல்லிடுவாய் !
உழைக்கக் கற்றுத் தந்திடுவாய் !
ஊருக்கு நல்லது செய்துவரும்,
உலகில் சிறந்தவர் நீ அப்பா!

- நாகை கா. சுகுமாரன்

**சொல்லும் பொருளும்:**

அறிவு பள்ளி
உலகம் உண்மை உழைப்பு
துள்ளி ஊர் புகட்டு ஆடு
வளர் நல்லது தந்திடு



புகட்டி : கற்றுக்கொடுத்து
அன்னை : அம்மா
பிதா : அப்பா




## கொன்றைவேந்தன்

அன்னையும் பிதாவும்
முன்னறி தெய்வம்



# வழியை வரைந்து காட்டுவோம்





# சான்றோர்கள்



தொல்காப்பியர்

தொல்காப்பியம்



திருவள்ளுவர்

திருக்குறள்



இளங்கோவடிகள்

சிலப்பதிகாரம்



கம்பர்

இராமாயணம்



ஔவையார்

ஆத்திசூடி



திருமூலர்

திருமந்திரம்



பாரதியார்

பாஞ்சாலி சபதம்



உ.வே.சாமிநாத ஐயர்

சுவடிகள் மீட்பு



பாரதிதாசன்

அழகின் சிரிப்பு

பல்லாயிரம் அறிஞர்கள் தமிழ் மொழிக்குத் தொண்டாற்றி மொழிக்கு வளம் சேர்த்தார்கள். அவர்களை நினைவுகூர்தல் நம் கடமையாகும்.



**ஆசிரியர் கவனத்திற்கு:**
பேச்சு மற்றும் மனனப் பயிற்சி

தமிழ் வளர்த்த சான்றோர்கள் தமிழுக்கு ஆற்றிய சேவைகளைப் பற்றியும், அவர்களுடைய வாழ்க்கையில் நடந்த சம்பவங்களையும் தொகுத்து ஒவ்வொரு வகுப்பிலும் சொல்லுவது அவசியம். மாணவர்கள் மனதில் சான்றோர்களின் பெயர்கள் ஆழமாகப் பதியவேண்டும்.

## உயிர் எழுத்துக்கள்

தமிழில் உள்ள முப்பது முதலெழுத்துக்களில் தனித்து இயங்கும் பன்னிரெண்டு அடிப்படை எழுத்துக்கள் உயிரெழுத்துக்கள் எனப்படும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ | ஆ | இ | ஈ | உ | ஊ |
| எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |

## மெய் எழுத்துக்கள்

தமிழில் உள்ள முப்பது முதலெழுத்துக்களில் புள்ளியுடன் கூடிய பதினெட்டு எழுத்துக்கள் மெய்யெழுத்துக்கள் என்று அழைக்கப்படும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| க் | ங் | ச் | ஞ் | ட் | ண் |
| த் | ந் | ப் | ம் | ய் | ர் |
| ல் | வ் | ழ் | ள் | ற் | ன் |

# உயிர்மெய் எழுத்துக்கள்

தமிழின் முதலெழுத்துக்களான உயிரெழுத்துக்கள் பன்னிரெண்டும், மெய்யெழுத்துக்கள் பதினெட்டும் சேர்ந்து ஒலிப்பதால் பிறக்கும் இருநூற்றி பதினாறு எழுத்துக்களும் உயிர்மெய் எழுத்துக்கள் எனப்படும்.

பதினெட்டு மெய்யெழுத்துக்களுடன் அ என்ற உயிரெழுத்து சேர்ந்து ஒலிப்பதால் பிறக்கும் பதினெட்டு உயிர்மெய் எழுத்துக்களின் அட்டவணை:

உதாரணம் :

க் + அ = க

ங் + அ = ங

ச் + அ = ச

ஞ் + அ = ஞ

| | | | | | |
|---|---|---|---|---|---|
| க | ங | ச | ஞ | ட | ண |
| த | ந | ப | ம | ய | ர |
| ல | வ | ழ | ள | ற | ன |

## ஆய்த எழுத்து

ஃ

ஆய்த எழுத்து தமிழில் உள்ள ஒரு சிறப்பெழுத்து ஆகும்.

# தமிழ் எழுத்துக்களின் அட்டவணை

| | | ஆய்த எழுத்து | உயிரெழுத்துக்கள் | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஃ | அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
| 1 | மெய்யெழுத்துக்கள் | க் | க | கா | கி | கீ | கு | கூ | கெ | கே | கை | கொ | கோ | கௌ |
| 2 | | ங் | ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ |
| 3 | | ச் | ச | சா | சி | சீ | சு | சூ | செ | சே | சை | சொ | சோ | சௌ |
| 4 | | ஞ் | ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ |
| 5 | | ட் | ட | டா | டி | டீ | டு | டூ | டெ | டே | டை | டொ | டோ | டௌ |
| 6 | | ண் | ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ |
| 7 | | த் | த | தா | தி | தீ | து | தூ | தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| 8 | | ந் | ந | நா | நி | நீ | நு | நூ | நெ | நே | நை | நொ | நோ | நௌ |
| 9 | | ப் | ப | பா | பி | பீ | பு | பூ | பெ | பே | பை | பொ | போ | பௌ |
| 10 | | ம் | ம | மா | மி | மீ | மு | மூ | மெ | மே | மை | மொ | மோ | மௌ |
| 11 | | ய் | ய | யா | யி | யீ | யு | யூ | யெ | யே | யை | யொ | யோ | யௌ |
| 12 | | ர் | ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ |
| 13 | | ல் | ல | லா | லி | லீ | லு | லூ | லெ | லே | லை | லொ | லோ | லௌ |
| 14 | | வ் | வ | வா | வி | வீ | வு | வூ | வெ | வே | வை | வொ | வோ | வௌ |
| 15 | | ழ் | ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ |
| 16 | | ள் | ள | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ |
| 17 | | ற் | ற | றா | றி | றீ | று | றூ | றெ | றே | றை | றொ | றோ | றௌ |
| 18 | | ன் | ன | னா | னி | னீ | னு | னூ | னெ | னே | னை | னொ | னோ | னௌ |

# உயிர்மெய் எழுத்து - பாட்டு

கஙசஞ சொல்லிடுவேன்
கல்வி கற்க சென்றிடுவேன் !
டணதந சொல்லிடுவேன்
கருத்தாய்த் தமிழைக் கற்றிடுவேன் !
பமயர சொல்லிடுவேன்
பண்பைப் பெற்று வென்றிடுவேன் !
லவழள சொல்லிடுவேன்
வாழ்வில் வெற்றி கொண்டிடுவேன் !
றனறன சொல்லிடுவேன்
மானாய்த் துள்ளிச் சென்றிடுவேன் !



## திருக்குறள்

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

கற்கத் தகுந்த நூல்களைப் பிழை இல்லாமல் கற்கவேண்டும் கற்ற பிறகு கற்ற கல்விக்கு ஏற்ப நல்ல வழிகளில் வாழவேண்டும்.

### சொல்லும் பொருளும்:

| | | | | |
|---|---|---|---|---|
| கல்வி | பண்பு | வெற்றி | வாழ்வு | நூல் |
| கருத்து | துள்ளி | மான் | பிழை | வெல் |
| நல்லவழி | படிக்கவேண்டும் | வாழவேண்டும் | | |

பிழை : தவறு  நூல் : புத்தகம்
கற்க : படிக்க  சொல் : வார்த்தை

# உயிர் எழுத்துக்கள் - சொற்கள்-1

# அ





அணில்

அடுப்பு

# ஆ





ஆடு

ஆலயம்

**சொல்லும் பொருளும்:**

நன்று : நல்லது
சாலவும் : மிகவும்
ஆலயம் : கோயில்
தொழுவது : கடவுளை வணங்குவது

அம்மா

அன்பு

அப்பா

அறிவு

அடக்கம்

ஆசை

ஆற்றல்

ஆண்டவன்



## கொன்றைவேந்தன்

ஆலயம் தொழுவது
சாலவு(ம்) நன்று

# உயிர் எழுத்துக்கள் - சொற்கள்-2

இ



இலை



இமை

ஈ



ஈ



ஈச்சை

## சொல்லும் பொருளும்:



இசை

ஈகை



இதயம்

ஈட்டி

இன்பம்

ஈரம்




இல்லம்

இருதயம்

ஈச்சை மரம்

# உயிர் எழுத்துக்கள் - சொற்கள்-3





## உ

உரல்

உப்பளம்





## ஊ

ஊதல்

ஊஞ்சல்

### சொல்லும் பொருளும்:

| | | |
|---|---|---|
| இல்லறம் | : | குடும்பம் |
| அல்லது | : | இல்லையன்றால் |
| நல்லறம் | : | நல்லசெயல் |
| அன்று | : | இல்லை |

உண்மை

உழைப்பு

உணவு

உதிரம்

உடம்பு

உடை

ஊசி

ஊற்று

ஊக்கம்

ஊர்

### கொன்றைவேந்தன்

இல்லற மல்லது
நல்லற மன்று

# உயிர் எழுத்துக்கள் - சொற்கள்-4

## எ



எறும்பு



எருக்கு

## ஏ



ஏணி



ஏர்-கலப்பை

### சொல்லும் பொருளும்:



எளிமை

எண்ணம்

எஃகு

எழுத்து

எடை

ஏழு

ஏடு

ஏழை

ஏற்றம்

ஏக்கம்



எடைக்கல்

# உயிர் எழுத்துக்கள் - சொற்கள்-5



5

ஐந்து

ஐ

ஐயனார்



ஒட்டகம்



ஒட்டியாணம்

ஒ

**சொல்லும் பொருளும்:**

ஐயம்

ஐப்பசி

ஐம்புலம்

**கொன்றைவேந்தன்**

ஈயார் தேட்டைத்
தீயார் கொள்வர்

ஒலி

ஒளி

ஒழுக்கம்

ஒட்டடை

ஈயார் : தருமம் செய்யாதவர்
தேட்டை : தேடிய செல்வத்தை
தீயார் : கள்வர்கள் போன்ற தீயவர்கள்
கொள்வர் : அபகரித்துச்செல்வர்.

# உயிர் எழுத்துக்கள் - சொற்கள்-6

## ஒ



ஓடம்



ஓணான்

## ஔ



ஔவை



ஔடதம்

### சொல்லும் பொருளும்:

ஓலை

ஓசை

ஓய்வு

ஓடை

ஔவியம்

## ஆய்த எழுத்தும் சொல்லும்



எ:.கு

## ஃ



# எங்கள் மொழி







**சொற்கள்**

மொழி
பேசு
சொல்
செல்
கல்
கூடு
உதவு
நயம்
நல்லது

எங்கள் மொழி நல்ல மொழி
இனிமையாகப் பேசும் மொழி
அன்னை சொல்லித் தந்தமொழி
அன்பொழுகப் பேசும் மொழி
பள்ளி சென்று கற்ற மொழி
பக்குவமாய் பேசும் மொழி
நண்பர் கூடிப் பேசும் மொழி
நயமுடனே பேசும் மொழி
நாள்தோறும் உதவும் மொழி
நல்ல தமிழ் எங்கள் மொழி
நாள்தோறும் உதவும் மொழி
நல்ல தமிழ் எங்கள் மொழி



குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா

**கீழ்க்கண்ட வாக்கியங்களைப பேசிப் பழகு**

- எனக்குத் தமிழ் தெரியும்.
- உங்களுக்குத் தமிழ் தெரியுமா?
- நான் தமிழில் நன்றாகப் பேசுவேன்.
- நீங்கள் எப்படிப் பேசுவீர்கள்?
- நான் என் தாய் மொழியை நேசிக்கின்றேன்.

அன்னை
அம்மா
தாய்




தமிழுக்கும் அமுதென்று பேர்!
அந்தத் தமிழ் இன்பத்தமிழ்
எங்கள் உயிருக்கு நேர்!

*புரட்சிக்கவி பாரதிதாசன்*



காந்தள் மலர்

## வினாவிற்கு ஏற்ற விடையைக் கூறு:

1. உயிரெழுத்துக்கள் எத்தனை? அவை யாவை?

2. மெய்யெழுத்துக்கள் எத்தனை? அவை யாவை?

3. தமிழில் உள்ள சிறப்பெழுத்தின் பெயர் என்ன?

4. உயிர் மெய்யெழுத்துக்கள் எப்படித் தோன்றுகின்றன? அவை யாவை?

## திருக்குறள்



அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்.

அறிவில்லாதவர்கள் எவ்வளவு செல்வம் பெற்றிருந்தாலும் அவர்கள் ஒன்றுமில்லாதவர்களே. அறிவாளிகளிடம் செல்வம் இல்லையென்றாலும் அவர்கள் எல்லாம் பெற்றவர்களாகக் கருதப்படுவார்கள்.

### சொல்லும் பொருளும்:

அறிவாளி

செல்வம்

அறிவு

கல்லாதவர் : படிக்காதவர்
பெற்றிருந்தாலும் : பெற்று இருந்தாலும்
அறிவில்லாதவர்கள் : அறிவு இல்லாதவர்கள்
ஒன்றுமில்லாதவர்கள் : ஒன்றும் இல்லாதவர்கள்

# ஓடிவிளையாடு

ஓடி விளையாடு பாப்பா -நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா -ஒரு
குழந்தையை வையாதே பாப்பா
காலை எழுந்தவுடன் படிப்பு -பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு -என்று
வழக்கப் படுத்திக்கொள்ளு பாப்பா



மகாகவி பாரதியார்

## சொற்களைக் கண்டுபிடி




| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மா | டு | க | வி | வு | கூ | ரை |
| லை | வி | ளை | யா | ட் | டு | த |
| கா | ளை | வ | ழ | க் | க | ம் |
| து | யா | கு | ன் | று | னி | ட |
| றை | பா | ப் | பா | சீ | வு | பா |



### மறைந்திருக்கும் சொற்களில் சில:

காலை, பகல், இரவு, மாலை, ஓய்வு, விளையாட்டு, படிப்பு, பாட்டு, கனிவு, விளையாடு, கூடு, பாப்பா, வழக்கம், எழு, கொடு, குழந்தை, காளை, காது, கூரை, தரை, தடு, கனி, சீவு, பாறை, குன்று, கவி, யாது, வியாழன், குவளை, வளை, மாடு, கூவு, சீறு, விடு, பாவு, பாடம், வகு, காவி, சீனி, கட, கறு, விளை .

# எழுத்தின் தோற்றம் - எழுதிப்பழகு

க் + அ = க
ங் + அ = ங
ச் + அ = ச
ஞ் + அ = ஞ
ட் + அ = ட
ண் + அ = ண
த் + அ = த
ந் + அ = ந
ப் + அ = ப
ம் + அ = ம
ய் + அ = ய
ர் + அ = ர
ல் + அ = ல
வ் + அ = வ
ழ் + அ = ழ
ள் + அ = ள
ற் + அ = ற
ன் + அ = ன

**ஆசிரியர் கவனத்திற்கு:**
பேச்சுப் பயிற்சிக்கான கதைகள்.



எல்லா சொற்களையும் மனனம் செய்ய வேண்டும். எழுதிப்பழக வேண்டும். கட்டங்களில் மறைந்திருக்கும் சொற்களைக்கொண்டு மாணவர்களை சிறு கதை சொல்ல ஊக்குவிக்கவேண்டும்.

உதாரணம்: கயல்விழி காலையில் தரையில் அமர்ந்து பாடம் படித்தாள். வழக்கம்போல் மாலையில் பாட்டு பாடி விளையாடினாள். பக்கத்தில் ஒரு குன்றுக்கு அருகிலிருந்த பாறையில் பசியுடன் இருந்த காளை மாடு சீறு கொண்டு எழுந்தது. அவள் கனிவுடன் ஒரு குவளையில் தண்ணீரும் உணவும் எடுத்துச்சென்று தரையில் வைத்தாள்......

# வெள்ளைப்பசு

தோட்டத்தில் மேயுது வெள்ளைப் பசு - அங்கே
துள்ளிக் குதிக்குது கன்றுக் குட்டி.
அம்மா என்குது வெள்ளைப் பசு - உடன்
அண்டையில் ஓடுது கன்றுக் குட்டி
நாவால் நக்குது வெள்ளைப் பசு - பாலை
நன்றாய்க் குடிக்குது கன்றுக் குட்டி.
முத்தம் கொடுக்குது வெள்ளைப் பசு - மடி
முட்டிக் குடிக்குது கன்றுக் குட்டி



கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை

## சொற்களைக் கண்டுபிடி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மா | டு | நா | ப | தோ | கு |
| ம் | வா | க் | கு | ட் | டி |
| அ | ங் | கு | தி | ட | க் |
| டை | மு | த் | த | ம் | கு |
| ஓ | டு | து | மே | யு | து |

மறைந்திருக்கும் சொற்களில் சில:

மாடு, நாடு, அம்மா, தோட்டம், நாக்கு, வாக்கு, வாடு, வாகு, அங்கு, அடை, ஓடை, ஓடுது, மேயுது, ஓடு, குத்து, முத்தம், குதி, பகு, குட்டி, குடி.

| பேச்சுத் தமிழ் | | சரியான பதம் |
|---|---|---|
| மேயுது | ⟷ | மேய்கிறது |
| குதிக்குது | ⟷ | குதிக்கிறது |
| என்குது | ⟷ | என்கிறது |
| நக்குது | ⟷ | நக்குகிறது |
| குடிக்குது | ⟷ | குடிக்கிறது |
| கொடுக்குது | ⟷ | கொடுக்கிறது |



# சுட்டும் சொற்களை அறிவோம்

| | | |
|---|---|---|
| இவன் | அவன் | எவன்? |
| இவள் | அவள் | எவள்? |
| இவர் | அவர் | எவர்? |
| இது | அது | எது? |
| இவை | அவை | எவை? |
| இங்கே | அங்கே | எங்கே? |



## கோடிட்ட இடத்தை நிரப்புக:

1. ______________ மேயுது ______________ பசு.
2. நாவால் ______________ வெள்ளைப் ______________
3 முத்தம் ______________ பசு.
4 மடி ______________ குடிக்குது ______________
5 துள்ளிக் ______________ கன்றுக்குட்டி.

## வினாவிற்கு ஏற்ற விடை எழுது:

1. கன்றுக்குட்டி எதைக் குடிக்கிறது?

______________________________

2. பசு எங்கே மேய்கிறது?

______________________________

3. எங்கள் வீட்டுப் பசு எங்கே இருக்கிறது?

______________________________

______________________________

# ஒற்றுமையே வெற்றிதரும்

ஒரு காட்டில் ஒரு சிங்கமும் பல பசுக்களும் வசித்து வந்தன. சிங்கத்துக்குப் பசிக்கும்போதெல்லாம் ஏதாவது ஒரு பசுவைக் கொன்று சாப்பிட்டுவந்தது.



ஒருநாள் நான்கு பசுக்கள் ஓரிடத்தில் ஒற்றுமையாக புல் மேய்ந்துகொண்டிருந்தன. அப்போது அங்கு வந்த சிங்கம் அந்தப் பசுக்களைக் கொன்று தின்னுவதற்கு முயற்சி செய்தது.

ஆனால் நான்கு பசுக்களும் ஒன்றுசேர்ந்து அந்தச் சிங்கத்தை தாக்கி விரட்டி விட்டன. பசுக்கள் ஒற்றுமையாக இருந்ததால் சிங்கத்தால் அந்தப் பசுக்களைக் கொல்ல முடியவில்லை.





ஒற்றுமையாக இருந்த பசுக்கள் ஒரு நாள் சண்டை போட்டுக் கொண்டன. அதனால் அவை பிரிந்துசென்று தனித்தனியாகப் புல் மேய்ந்து கொண்டிருந்தன.

தனித்தனியாக இருந்தப் பசுக்களைப் பார்த்த சிங்கம் உடனே ஒரு பசுவைத் தாக்கியது. அதைக் கண்டும் மற்ற பசுக்கள் உதவிக்கு வரவில்லை. சிங்கம் தனியாக இருந்தப் பசுவைக் கொன்றுத் தின்றுவிட்டது.





இதைக்கண்ட மற்ற மூன்று பசுக்களும் யோசித்தன. சண்டைப் போட்டுக்கொன்று பிரிந்து சென்றால் ஒரு பயனும் இல்லை. ஆபத்து நேரத்தில் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்வதுதான் நல்லது என்பதை உணர்ந்தன.



அடுத்தநாள் அந்தச்சிங்கம் மீண்டும் அங்கு வந்து ஒரு பசுவைக் கொல்ல முயன்றது. அதைக்கண்ட மற்ற இரண்டு பசுக்களும் அந்தச் சிங்கத்தை தாக்கி விரட்டி விட்டன.

ஒருவருக்கு ஆபத்து என்றால் மற்றவர்கள் அவருக்கு உதவி அவருக்கு உதவிசெய்ய வேண்டும். பிறருக்கு உதவி செய்தால் எல்லோரும் மகிழ்ச்சியாக வாழலாம் என்பதை அந்தப்பசுக்கள் உணர்ந்து கொண்டன.

## வினாவிற்கு ஏற்ற விடை எழுது:

1. பசு ஏன் உயிரிழந்தது?

---

---

2. நாம் எல்லோரும் எப்படி வாழ வேண்டும்?

---

### எதிர்ச்சொல்:

முயற்சி X சோம்பல்
சேர்ந்து X பிரிந்து
ஒற்றுமை X வேற்றுமை
ஒற்றுமையாக X தனித்தனியாக
மகிழ்ச்சியாக X துக்கமாக

### ஒருமை பன்மை:

ஒன்று - பல
ஒரு பசு - பல பசுக்கள்
ஒருவர் - பலர்
புல் - புற்கள்
பல் - பற்கள்

வண்ணம் தீட்டு
வாசித்துப்பழகு

# உடல் உறுப்புகள்

தம்பிகளே ! தங்கைகளே !

அண்ணன் சொல்வதைக் கேளுங்களேன் !
உடலுறுப்பின் பயனறிந்து
ஒழுங்காய் அதனைப் பேணுங்களேன் !
தலையிருக்கு, தலையிருக்கு

முதன்மை பொறுப்பை ஏற்பதற்கு !
விழியிருக்கு, விழியிருக்கு

வெளிச்சத்தை நாமும் பார்ப்பதற்கு !
செவியிருக்கு, செவியிருக்கு

செய்திகள் பலவும் கேட்பதற்கு !

நறுமணத்தை உணர்வதற்கு
இயற்கை தந்த மூக்கிருக்கு !

இனிமைதரும் வார்த்தைகளை
சொல்லிடத்தானே வாயிருக்கு !

கையிருக்கு, கையிருக்கு
பிறருக்கு உதவி புரிவதற்கு !
விரலிருக்கு, விரலிருக்கு

அழகாய் நாமும் எழுதுதற்கு !
காலிருக்கு, காலிருக்கு
நல்லதைத் தேடி நடப்பதற்கு !
நம்முடைய உறுப்புகளை
நலமாய் நாமும் காத்திடுவோம் !

அபிராமி

## வினைச்சொல்லும் பொருளும்

| | | | |
|---|---|---|---|
| ஏல் | ஏற்பேன் | நட | நடப்பேன் |
| கேள் | கேட்பேன் | பேணு | பேணுவேன் |
| பார் | பார்ப்பேன் | சொல் | சொல்வேன் |
| உணர் | உணர்வேன் | தேடு | தேடுவேன் |

### சொல்லும் பொருளும்:

விழி - கண்
செவி - காது
நறுமணம் - வாசனை
இருள் - இருட்டு
ஒளி - வெளிச்சம்
ஒழுங்காய் - ஒழுங்காக
நறுமணத்தை - வாசனையை
எழுதுதற்கு - எழுதுவதற்கு
பேணுங்கள் - காப்பாற்றுங்கள்
உதவி புரிவதற்கு - உதவி செய்வதற்கு

### எதிர்ச்சொல் அறிக:

சில x பல
உயர்வு x தாழ்வு
நல்லது x கெட்டது
இருக்கிறது x இல்லை
வெளிச்சம் x இருட்டு

### சொற்களைப் பிரித்து பொருள் அறிவோம்:

உடலுறுப்பின் - உடல் உறுப்பின்
பயனறிந்து - பயன் அறிந்து
தலையிருக்கு - தலை இருக்கிறது
விழியிருக்கு - விழி இருக்கிறது
செவியிருக்கு - செவி இருக்கிறது
வாயிருக்கு - வாய் இருக்கிறது
கையிருக்கு - கை இருக்கிறது
விரலிருக்கு - விரல் இருக்கிறது
காலிருக்கு - கால் இருக்கிறது

அழகு
நலம்
உதவி
பயன்
செய்தி
ஒழுங்கு
உறுப்பு
இனிமை
நல்லது
இயற்கை
வெளிச்சம்

# ஒன்றாய் கூடி வாழ்ந்திடிவோம்

1 ஒன்று என்று சொல்வோம்
ஒன்றாய் கூடி வாழ்ந்திடுவோம்
2 இரண்டு என்று சொல்வோம்
இரண்டு கையால் வணங்கிடுவோம்
3 மூன்று என்று சொல்வோம்
முயற்சி செய்து வென்றிடுவோம்
4 நான்கு என்று சொல்வோம்
நன்மைகள் பலவும் செய்திடுவோம்
5 ஐந்து என்று சொல்வோம்
ஐக்கியமாய் பழகிடுவோம்
6 ஆறு என்று சொல்வோம்
ஆர்வமாய் பயின்றிடுவோம்
7 ஏழு என்று சொல்வோம்
ஏழ்மையை ஒழித்திடுவோம்
8 எட்டு என்று சொல்வோம்
விட்டுக்கொடுத்து வாழ்ந்திடுவோம்
9 ஒன்பது என்று சொல்வோம்
ஓய்வின்றி உழைத்திடுவோம்
10 பத்து என்று சொல்வோம்
பாசமாய் நடந்திடுவோம்



## கொன்றைவேந்தன்

எண்ணும் எழுத்தும்
கண்ணெனத் தகும்

எண்ணும் : கணக்கும்
எழுத்தும் : இலக்கணமும்
கண்ணெனத் தகும் : கண்களைப் போன்றது

## சொல்லும் பொருளும்:

| | | |
|---|---|---|
| முயற்சி | பயில் | உழைப்பு |
| ஆர்வம் | நன்மை | பழக்கம் |
| ஏழ்மை | ஐக்கியம் | வாழ்க்கை |
| ஓய்வு | விட்டுக்கொடு | பாசம் |



கூடி : ஒன்றாய் சேர்ந்து

பாசம் : அன்பு

ஐக்கியம் : ஒன்றாகுதல்

ஓய்வின்றி : ஓய்வு இல்லாமல்

ஆசிரியர் குறிப்பு:
இந்தச் சொற்களைக் கொண்டு எளிய சொற்றொடர்களை உருவாக்கவேண்டும்.

நான்
நாம்
நாங்கள்
நீ
நீங்கள்
அவன்
அவர்
அவர்கள்

சொல் - சொல்லிடுவோம்
வாழ் - வாழ்ந்திடுவோம்
வணங்கு - வணங்கிடுவோம்
வெல் - வென்றிடுவோம்
செய் - செய்திடுவோம்
பழகு - பழகிடுவோம்
பயில் - பயின்றிடுவோம்
ஒழி - ஒழித்திடுவோம்
உழை - உழைத்திடுவோம்
நட - நடந்திடுவோம்

# சுவைகள்



நாக்கு உணரக்கூடிய சுவைகள் ஆறு வகைப்படும். அவை இனிப்பு, கசப்பு, புளிப்பு, உவர்ப்பு, கார்ப்பு, துவர்ப்பு ஆகியவையாகும். இந்த ஆறு சுவைகளுடன் கூடிய உணவு நம் உடலுக்கு மிக அவசியம் தேவை.



## இனிப்பு

இனிப்பு தசையை வளர்க்கிறது.



## கசப்பு

கசப்பு நரம்புகளைப் பலப்படுத்துகிறது.



## புளிப்பு

புளிப்பு கொழுப்பை உற்பத்தி செய்கிறது.



## காரம் கார்ப்பு

கார்ப்பு எலும்புகளை உறுதியாக்குகிறது.



## உவர்ப்பு

உவர்ப்பு உமிழ் நீரைச் சுரக்கச்செய்கிறது.



## துவர்ப்பு

துவர்ப்பு இரத்தத்தை பெருக்குகின்றது.

**எனவே நாம் இந்த ஆறு சுவைகளைத் தரும் எல்லா உணவுகளையும் உண்ண வேண்டும்.**

## சொல்லும் பொருளும்:

| | | | | |
|---|---|---|---|---|
| உடல் | வாய் | உதடு | பல் | நாக்கு |
| சுவை | வளர் | உறுதி | தசை | பலம் |
| இரத்தம் | பெருக்கு | | | |
| எலும்பு | நரம்பு | | | |

பல் : பற்கள்
சுவை : சுவைகள்
நரம்பு : நரம்புகள்
எலும்பு : எலும்புகள்

உமிழ் நீர் = எச்சு

தேன் இனிக்கும்
பாகற்காய் கசக்கும்
எலுமிச்சை புளிக்கும்
உப்பு உவர்க்கும்
மிளகாய் உறைக்கும்
பாக்கு துவர்க்கும்

## கேள்வி - பதில்

1. சுவைகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

----------------------------------------

----------------------------------------

2. சுவையை உணரக்கூடிய உறுப்பின் பெயர் என்ன?

----------------------------------------

3. நாம் ஏன் அறுசுவை உணவை உண்ண வேண்டும்?

----------------------------------------

----------------------------------------

----------------------------------------

----------------------------------------

----------------------------------------

----------------------------------------



# வானவில்

வானத்தில் வட்டமாகத் தோன்றும் வண்ணங்கள்-தான் வானவில்.

வானவில் சூரியனுக்கு எதிர் திசையில் தோன்றும்.

வானத்தில் மேகங்கள் இருக்கிறது. அந்த மேகத்தில் உள்ள நீர்த்துளிகள் மழையாகப் பொழிகிறது.

அந்த மழைநீர்த்துளிகளில் சூரிய ஒளி ஊடுருவி, சிதறலடைந்து வானவில் தோன்றுகிறது.

வானவில்லில் ஊதா, கருநீலம், நீலம், பச்சை, மஞ்சள், செம்மஞ்சள், சிவப்பு என ஏழு நிறங்கள் இருக்கும்.

ஊதா | கருநீலம் | நீலம் | பச்சை | மஞ்சள் | செம்மஞ்சள் | சிவப்பு

## சொல்லும் பொருளும்:

வானம் | மேகம் | மழை | நீர் | துளி

வில் | சிதறல் | சூரியன் | ஒளி

வானவில் | பொழிகிறது | தோற்றம்

கேள்வி : வினா

பதில் : விடை

நிறம் : வண்ணம்

ஊடுருவி : உள்ளே சென்று



# வினாச்சொற்கள்

## ஒருமை - பன்மை

துளி - துளிகள்
நிறம் - நிறங்கள்
வண்ணம் - வண்ணங்கள்

## வினாச் சொற்கள்

என்ன? ஏன்? எங்கே? எது? எவை?

எப்படி? எப்பொழுது? எவ்வளவு?

எத்தனை? யார்? யாரை? யாருக்கு?

யாருடைய? யாருடன்? யாவை?

## கேள்வி - பதில்



1. மேகம் எங்கே இருக்கிறது?
2. வானவில் என்றால் என்ன?
3. மழை என்றால் என்ன?
4. வானவில்லின் நிறங்களைக் கூறு:
5. வானவில் எப்படித் தோன்றுகிறது?
6. வானவில் எந்த திசையில் தோன்றும்?
7. வானவில்லில் மொத்தம் எத்தனை நிறங்கள் இருக்கின்றன?

# மரங்கள்



ஆலமரம்



பனைமரம்



அரசமரம்



வேப்பமரம்



தென்னைமரம்



வாழைமரம்



பலாமரம்



கறிவேப்பிலைமரம்



மாமரம்



முருங்கைமரம்




நிறைய மரங்கள், செடி, கொடி புதர் போன்ற தாவரங்கள் இருக்கும் இடத்தைக் காடு என்று அழைப்பார்கள்.

காட்டில் கொடிய மிருகங்கள், பறவைகள், வண்டுகள், பாம்புகள் போன்ற உயிரினங்கள் வாழுகின்றன.

காட்டில் பாறைகளும், நீரோடைகளும் கூட காணப்படும். மிகுந்த ஆபத்து நிறைந்த இடம் என்பதால் அங்கு மனிதர்கள் வசிப்பதில்லை.

வண்ணம் தீட்டு வாசித்துப்பழகு




குளவி


பாம்பு


கொடி


பூரான்


சிலந்தி


தேனீ


செடி


வண்டு


வெட்டுக்கிளி


தேள்


புதர்

# உயிரினங்கள்

## கடலில் வசிப்பவை


மீன்


கணவாய்


நண்டு


கடல்குதிரை


சங்கு


இரால்


ஆமை


வலம்புரிசங்கு


முத்துச்சிப்பி


சோழி

## வீட்டு விலங்குகள்


நாய்


செம்மறியாடு


ஆடு


முயல்


பசு


பூனை


குதிரை

## வனவிலங்குகள்




1. காட்டில் வசிக்கும் விலங்குகளின் பெயர்களைக் கூறு:
2. வீட்டில் வாழும் விலங்குகளின் பெயர்களைக் கூறு:
3. கடலில் வாழும் உயிரினங்கள் எவை?
4. காடு என்றால் என்ன?

**ஆசிரியர் கவனத்திற்கு:**
பேச்சுப் பயிற்சிக்கான கதைகள்.

பேச்சுப்பயிற்சியும், எழுதும் பயிற்சியும் மிக அவசியம். அடர்ந்த மரங்கள், இருள், ஆபத்து, கொடிய உயிரினங்கள் நிறைந்தக் காட்டைப்பற்றி விளக்கி அது குறித்தக் கதைகளைக் கூறவேண்டும்.

### சொல்லும் பொருளும்:

வனம் : காடு
விலங்கு : மிருகங்கள்
வசிக்கும் : வாழும்
உயிரினம் : உயிர் + இனம்

# கடிகாரம்

டக்குடக்கு கடிகாரம்
தட்டு நிறைய பணியாரம்
குட்டிகுட்டி சுண்டெலிகள்
எட்டிஎட்டிப் பார்த்தனவே
டண்டண் என்றது கடிகாரம்
தாவி வந்தது கரும்பூனை
கண்டு மிரண்ட சுண்டெலிகள்
காற்றாய் பறந்து மறைந்தனவே



டக்கு டக்கு
குட்டி குட்டி
எட்டி எட்டி
டண் டண்

கரும்பூனை - கருப்பு நிறப்பூனை



| மூன்று | ஆறு | ஒன்பது | பனிரெண்டு |
|---|---|---|---|

# எண்கள் 1-30

| | | |
|---|---|---|
| 1. ஒன்று | 11. பதினொன்று | 21. இருபத்தி ஒன்று |
| 2. இரண்டு | 12. பனிரெண்டு | 22. இருபத்தி இரண்டு |
| 3. மூன்று | 13. பதிமூன்று | 23. இருபத்தி மூன்று |
| 4. நான்கு | 14. பதினான்கு | 24. இருபத்தி நான்கு |
| 5. ஐந்து | 15. பதினைந்து | 25. இருபத்தி ஐந்து |
| 6. ஆறு | 16. பதினாறு | 26. இருபத்தி ஆறு |
| 7. ஏழு | 17. பதினேழு | 27. இருபத்தி ஏழு |
| 8. எட்டு | 18. பதினெட்டு | 28. இருபத்தி எட்டு |
| 9. ஒன்பது | 19. பத்தொன்பது | 29. இருபத்தி ஒன்பது |
| 10. பத்து | 20. இருபது | 30. முப்பது |

# வனவிலங்குப் பூங்கா


டிங்கோ நாய்


ஈமு


நாரை


எக்கிட்னா


கங்காரு


நாய்ப்புலி


நெசவெறும்பு


கூக்குபாரா


பொவ்சம்


முதலை


குவாலா

## பேசிப்பழகு

**ஆஸ்திரேலியாவில் வாழும் சில விலங்குகளைப்பற்றிக் கூறு:**

நான் ஆஸ்திரேலியாவில் வசிக்கின்றேன். இங்கு கங்காரு, குவாலா போன்ற மிருகங்கள் வாழுகின்றன. கங்காரு தாவிக் குதித்துச் செல்லும். குவாலா மரக்கிளைகளைப் பிடித்துக் கொண்டு அமர்ந்திருக்கும். அது இலை தழைகளைச் சாப்பிடும். கங்காரு தன் குட்டியைத் தன்னுடைய வயிற்றில் சுமக்கும். குட்டிக் குவாலா தன் தாயின் முதுகைப் பிடித்துக்கொண்டு அமர்ந்திருக்கும். இந்த இரண்டு மிருகங்களையும் நான் வனப்பூங்காவில் பார்த்திருக்கிறேன்.

# திசைகள்




## நான்கு திசைகள்

காலையில் எழுந்தவுடன் தம்பி-ஒரு
வேலை நீ செய்ய வேண்டும் தம்பி
பாராய் கதிரவனைத் தம்பி அதன்
நேராய் நீ நின்றிடுவாய் தம்பி
உன் முன்னே இருக்கும் திசை கிழக்கு
உன் பின்னே இருக்கும் திசை மேற்கு
உன் இடதுகை காட்டுவது வடக்கு
உன் வலதுகை காட்டுவது தெற்கு

கிழக்கு
மேற்கு
வடக்கு
தெற்கு

காலையில் கதிரவன்
கிழக்கு திசையில்
உதிக்கும்.
அது மாலையில்
மேற்கு திசையில்
மறையும்.



# நாளும் பொழுதும்

ஒரு நாளின் மூன்று பொழுதுகளை காலை, பகல், இரவு என்று அழைப்பார்கள்.

| |
|---|
| காலை |
| பகல் |
| இரவு |

நான் காலையில் எழுந்ததும் படிப்பேன்.
நான் பகலில் பள்ளியில் இருப்பேன்.
நான் மாலையில் விளையாடுவேன்.
நான் இரவில் உறங்குவேன் (தூங்குவேன்).
என் அம்மாவும், அப்பாவும் தினமும் எனக்கு தமிழ் சொல்லிக்கொடுப்பார்கள்.

## வினாவிற்கு ஏற்ற விடை எழுது:

1. மூன்று வேளைகளின் பெயர்களைக் கூறு:

2. சூரியன் எந்த திசையில் உதிக்கும்?

3. சூரியன் மறையும் திசை எது?

4. திசைகள் எத்தனை? அவை யாவை?

## கோடிட்ட இடத்தை நிரப்புக:

1. நான் _____ எழுந்ததும் _____.
2. நான் _____ விளையாடுவேன்.
3. ஒரு நாளின் பொழுதுகளை _____, _____, _____ என்று அழைப்பார்கள்.

# ஏவற்சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| எழு - எழுவேன் | | தூங்கு - தூங்குவேன் | |
| நில் - நிற்பேன் | | உறங்கு - உறங்குவேன் | |
| படி - படிப்பேன் | | கொடு - கொடுப்பேன் | |
| பார் - பார்ப்பேன் | | மறை - மறைப்பேன் | |
| செய் - செய்வேன் | | காட்டு - காட்டுவேன் | |
| இரு - இருப்பேன் | | தடு - தடுப்பேன் | |

## சொல்லும் பொருளும்:

விடியற்காலை | காலை | பகல் | மாலை

இரவு | நேற்று | இன்று | நாளை | தினமும்

பகல் : மதியம்

கதிரவன் : சூரியன்

உதிக்கும் : தோன்றும்

நாளன்னைக்கு : நாளைக்கு மறுநாள்

முந்தா நேற்று : நேற்றைக்கு முதல் நாள்

சொல்லிக்கொடுப்பார்கள் : கற்றுக்கொடுப்பார்கள்

## எதிர்ச்சொல் அறிக:

முன் x பின்

முன்னே x பின்னே

இடது x வலது

சரி x தப்பு

ஆம் x இல்லை

நல்லது x கெட்டது

# வாரநாட்கள்

எழு நாட்கள் சேர்ந்தது ஒரு வாரம். அவை:

| | | |
|---|---|---|
| 1. | ஞாயிறு | ஞாயிற்றுக்கிழமை |
| 2. | திங்கள் | திங்கட்கிழமை |
| 3. | செவ்வாய் | செவ்வாய்க்கிழமை |
| 4. | புதன் | புதன்கிழமை |
| 5. | வியாழன் | வியாழக்கிழமை |
| 6. | வெள்ளி | வெள்ளிக்கிழமை |
| 7. | சனி | சனிக்கிழமை |

**வினாவிற்கு ஏற்ற விடை எழுது:**

1. ஒரு வாரத்திற்கு எத்தனை நாட்கள்?

2. வாரத்தின் முதல் நாள் எது?

3. வாரத்தின் கடைசி நாள் எது?

4. வார இறுதி விடுமுறை நாட்கள் எவை?

5. உங்கள் தமிழ் வகுப்பு எந்த நாளில் நடைபெறுகிறது?



# மரம் வளர்ப்போம்

பூவே பூவே காய் தருவாய்
காயே காயே கனி தருவாய்
கனியே கனியே விதை தருவாய்
விதையே விதையே செடி தருவாய்
செடியே செடியே மரம் தருவாய்
மரமே மரமே மழை தருவாய்
மரத்தை வளர்ப்போம் மழை பெறுவோம்
மகிழ்ச்சியோடு வாழ்ந்திடுவோம்!

## சொல்லும் பொருளும்:

மழை | விதை | செடி | வளர் | மரம்
காய் | கனி | மகிழ்ச்சி | வாழ்க்கை
தருவோம் | பெறுவோம்

கனி : பழம்
மகிழ்ச்சி : ஆனந்தம்

# சொல் விளையாட்டு

## சொற்களைக் கண்டுபிடி

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| து | த் | ப | ஆ | ம் | கா | ய் |
| த் | க | னி | க | ல | ப் | பை |
| வி | தை | ம | த | கு | பு | தை |
| நா | தி | ற | வு | கோ | ல் | ழை |
| டி | வீ | தி | டு | ம் | ர | ம |



கட்டங்களில் உள்ள சொற்களை எல்லா திசைகளிலும் தேடலாம்

## சொல்லும் பொருளும்:

மழை, விதை, புதை, மரம், காய்

கதை, வித்து, வீதி, காப்பு, மதகு

திறவு, பத்து, குலம், கோல், புழை

பனி, நாதி, நாடி, கனி, புழை, கலப்பை

ஆம், தை, பை, திறவுகோல், தவுடு (தவிடு)

ஆசிரியர் கவனத்திற்கு:
பேச்சுப் பயிற்சிக்கான கதைகள்.

இயற்கையின் சுழற்சி பற்றி எளிய கதைகள் சொல்லவேண்டும். கட்டங்களில் மறைந்திருக்கும் சொற்களைக் கொண்டு எளிய கதை சொல்ல மாணவர்களை ஊக்கப்படுத்தவேண்டும்.

மேகம் மழையாகி, ஆறாகி, கடலில் கலந்து, ஆவியாகி மீண்டும் மேகமாவதை கதையாகச் சொல்ல வேண்டும்.

விதை செடியாகி, மரமாகி, பூப்பூத்து, காயும், கனியும், விதையும் தந்து மீண்டும் வளரும் இயற்கைச் சுழற்சியை கதையாகச் சொல்ல வேண்டும்.

# மாதங்கள்

| ஆங்கில மாதங்கள் | தமிழ் மாதங்கள் |
|---|---|
| ஜனவரி | சித்திரை |
| பிப்ரவரி | வைகாசி |
| மார்ச் | ஆனி |
| ஏப்ரல் | ஆடி |
| மே | ஆவணி |
| ஜூன் | புரட்டாசி |
| ஜூலை | ஐப்பசி |
| ஆகஸ்ட் | கார்த்திகை |
| செப்டெம்பர் | மார்கழி |
| அக்டோபர் | தை |
| நவம்பர் | மாசி |
| டிசம்பர் | பங்குனி |

## கேள்வி - பதில்

1. தமிழ் மாதங்கள் மொத்தம் எத்தனை? அவை யாவை?
2. ஆங்கில மாதங்களின் பெயர்களைக் கூறு:

## சொல்லும் பொருளும்:

பருவம் : காலம்　　கூறு : சொல்லு

ஆண்டு : வருடம்　　பகுத்து : பிரித்து

ஓராண்டிற்குரிய : ஒரு வருடத்திற்கு உரிய

# பருவங்கள்

ஓராண்டிற்குரிய குளிர் வெப்ப காலங்களை பெரும்பாலான நாடுகளில் நான்கு பருவங்களாகவும், சில நாடுகளில் ஆறு பருவங்களாகவும் பகுத்திருக்கிறார்கள்.

முதலில் பொதுவாக இருக்கின்ற நான்கு பருவங்களை அறிந்து கொள்வோம். அவை:வசந்தகாலம், கோடைகாலம், இலையுதிர்காலம், குளிர்காலம் எனப்படும்.



வசந்தகாலம்



கோடைகாலம்



இலையுதிர்காலம்



குளிர்காலம்

**வினாவிற்கு ஏற்ற விடை எழுது:**

1. பருவகாலங்கள் பொதுவாக எத்தனை வகைப்படும்? அவை யாவை?

# உயிர் எழுத்துக்கள் - எழுதிப்பழகு 1

அ



அன்பு

அறிவு

அடக்கம்

ஆ



ஆசை

ஆற்றல்

ஆக்கம்

இ



இசை

இதயம்

இனிமை

ஈ



ஈகை

ஈரம்

ஈட்டு

அ அ அ அ அ அ அ அ
அ அ அ அ அ அ அ அ
அ அ அ அ அ அ அ அ
அ அ அ அ அ அ அ அ
ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ
ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ
ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ
ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ
இ இ இ இ இ இ இ இ
இ இ இ இ இ இ இ இ
இ இ இ இ இ இ இ இ
இ இ இ இ இ இ இ இ
ஈ ஈ ஈ ஈ ஈ ஈ ஈ ஈ
ஈ ஈ ஈ ஈ ஈ ஈ ஈ ஈ
ஈ ஈ ஈ ஈ ஈ ஈ ஈ ஈ

# உயிர் எழுத்துக்கள் - எழுதிப்பழகு 2

உ



உண்மை

உழைப்பு

உணவு

ஊ



ஊக்கம்

ஊற்று

ஊதியம்

எ



எளிமை

எண்ணம்

எழுத்து

ஏ



ஏழ்மை

ஏளனம்

ஏற்றம்

உ உ உ உ உ உ உ உ
உ உ உ உ உ உ உ உ
உ உ உ உ உ உ உ உ
உ உ உ உ உ உ உ உ

ஊ ஊ ஊ ஊ ஊ ஊ ஊ
ஊ ஊ ஊ ஊ ஊ ஊ ஊ
ஊ ஊ ஊ ஊ ஊ ஊ ஊ
ஊ ஊ ஊ ஊ ஊ ஊ ஊ

எ எ எ எ எ எ எ எ எ எ
எ எ எ எ எ எ எ எ எ எ
எ எ எ எ எ எ எ எ எ எ
எ எ எ எ எ எ எ எ எ எ

ஏ ஏ ஏ ஏ ஏ ஏ ஏ ஏ ஏ ஏ
ஏ ஏ ஏ ஏ ஏ ஏ ஏ ஏ ஏ ஏ
ஏ ஏ ஏ ஏ ஏ ஏ ஏ ஏ ஏ ஏ
ஏ ஏ ஏ ஏ ஏ ஏ ஏ ஏ ஏ ஏ

# உயிர் எழுத்துக்கள் - எழுதிப்பழகு 3

## ஐ




ஐயம்

ஐப்பசி

ஐம்புலம்

## ஒ




ஒழுக்கம்

ஒற்றுமை

ஒட்டகம்

## ஓ




ஓடை

ஓசை

ஓய்வு

## ஔ




ஔடதம்

ஔவியம்

**ஐ** ஐ ஐ ஐ ஐ ஐ ஐ ஐ ஐ ஐ
ஐ ஐ ஐ ஐ ஐ ஐ ஐ ஐ ஐ ஐ
ஐ ஐ ஐ ஐ ஐ ஐ ஐ ஐ ஐ ஐ
ஐ ஐ ஐ ஐ ஐ ஐ ஐ ஐ ஐ ஐ

**ஒ** ஒ ஒ ஒ ஒ ஒ ஒ ஒ ஒ ஒ ஒ
ஒ ஒ ஒ ஒ ஒ ஒ ஒ ஒ ஒ ஒ ஒ
ஒ ஒ ஒ ஒ ஒ ஒ ஒ ஒ ஒ ஒ ஒ
ஒ ஒ ஒ ஒ ஒ ஒ ஒ ஒ ஒ ஒ ஒ

**ஓ** ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ஓ
ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ஓ
ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ஓ
ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ஓ

**ஔ** ஔ ஔ ஔ ஔ ஔ
ஔ ஔ ஔ ஔ ஔ ஔ
ஔ ஔ ஔ ஔ ஔ ஔ

# உயிர்மெய் எழுத்துக்கள் - எழுதிப்பழகு 1

க



கல்வி

கதை

கவிதை

ங



நுங்கு

பங்கு

சிங்கம்

ச



சங்கு

சடை

சட்டை

ஞ



ஞாயிறு

ஞாலம்

ஞானி

க க க க க க க க க க
க க க க க க க க க க
க க க க க க க க க க
க க க க க க க க க க

ங ங ங ங ங ங ங ங ங
ங ங ங ங ங ங ங ங ங
ங ங ங ங ங ங ங ங ங
ங ங ங ங ங ங ங ங ங

ச ச ச ச ச ச ச ச ச
ச ச ச ச ச ச ச ச ச
ச ச ச ச ச ச ச ச ச
ச ச ச ச ச ச ச ச ச

ஞ ஞ ஞ ஞ ஞ ஞ ஞ
ஞ ஞ ஞ ஞ ஞ ஞ ஞ

# உயிர்மெய் எழுத்துக்கள் - எழுதிப்பழகு 2

ட



கடல்

குடம்

உடல்

ண



குணம்

மணம்

பணம்

த



தலை

தட்டு

தரை

ந



நன்றி

நட்பு

நலம்

ட ட ட ட ட ட ட ட ட ட
ட ட ட ட ட ட ட ட ட ட
ட ட ட ட ட ட ட ட ட ட
ட ட ட ட ட ட ட ட ட ட

ண ண ண ண ண ண ண
ண ண ண ண ண ண ண
ண ண ண ண ண ண ண
ண ண ண ண ண ண ண

த த த த த த த த த த
த த த த த த த த த த
த த த த த த த த த த
த த த த த த த த த த

ந ந ந ந ந ந ந ந ந ந
ந ந ந ந ந ந ந ந ந ந
ந ந ந ந ந ந ந ந ந ந

# உயிர்மெய் எழுத்துக்கள் - எழுதிப்பழகு 3

ப




பண்பு

பரிவு

பசுமை

ம




மனம்

மலர்

மழலை

ய




வயது

வயல்

முயல்

ர




சிரம்

கரம்

கரடி

ப ப ப ப ப ப ப ப ப ப
ப ப ப ப ப ப ப ப ப ப
ப ப ப ப ப ப ப ப ப ப
ப ப ப ப ப ப ப ப ப ப

ம ம ம ம ம ம ம ம ம ம
ம ம ம ம ம ம ம ம ம ம
ம ம ம ம ம ம ம ம ம ம
ம ம ம ம ம ம ம ம ம ம

ய ய ய ய ய ய ய ய ய
ய ய ய ய ய ய ய ய ய
ய ய ய ய ய ய ய ய ய
ய ய ய ய ய ய ய ய ய

ர ர ர ர ர ர ர ர ர ர ர ர
ர ர ர ர ர ர ர ர ர ர ர ர
ர ர ர ர ர ர ர ர ர ர ர ர
ர ர ர ர ர ர ர ர ர ர ர ர

# உயிர்மெய் எழுத்துக்கள் - எழுதிப்பழகு 4

ல




லட்டு

உலகம்

ஆலமரம்

வ




வழி

வனம்

வண்டு

ழ




பழம்

கழனி

அழகு

ள




குளம்

பள்ளம்

வளம்

ல ல ல ல ல ல ல ல ல
ல ல ல ல ல ல ல ல ல
ல ல ல ல ல ல ல ல ல
ல ல ல ல ல ல ல ல ல

வ வ வ வ வ வ வ வ வ
வ வ வ வ வ வ வ வ வ
வ வ வ வ வ வ வ வ வ
வ வ வ வ வ வ வ வ வ

ழ ழ ழ ழ ழ ழ ழ ழ ழ
ழ ழ ழ ழ ழ ழ ழ ழ ழ
ழ ழ ழ ழ ழ ழ ழ ழ ழ
ழ ழ ழ ழ ழ ழ ழ ழ ழ

ள ள ள ள ள ள ள ள ள
ள ள ள ள ள ள ள ள ள
ள ள ள ள ள ள ள ள ள

# உயிர்மெய் எழுத்துக்கள் - எழுதிப்பழகு 5

ற




இறகு

சிறகு

விறகு

ன




வானம்

தினம்

தனம்

க ங ச ஞ ட ண த ந ப

க ங ச ஞ ட ண த ந ப

க ங ச ஞ ட ண த ந ப

க ங ச ஞ ட ண த ந ப

க ங ச ஞ ட ண த ந ப

க ங ச ஞ ட ண த ந ப

ற ற ற ற ற ற ற ற ற ற
ற ற ற ற ற ற ற ற ற ற
ற ற ற ற ற ற ற ற ற ற
ற ற ற ற ற ற ற ற ற ற

ன ன ன ன ன ன ன ன
ன ன ன ன ன ன ன ன
ன ன ன ன ன ன ன ன
ன ன ன ன ன ன ன ன

ம ய ர ல வ ழ ள ற ன
ம ய ர ல வ ழ ள ற ன
ம ய ர ல வ ழ ள ற ன
ம ய ர ல வ ழ ள ற ன
ம ய ர ல வ ழ ள ற ன

வண்ணம் தீட்டு
வாசித்துப்பழகு

# ஆதரிக்க வேண்டும்

பாலைப் பொழிந்துதரும் பாப்பா, - அந்தப்
பசுமிக நல்லதடி பாப்பா,
வாலைக் குழைத்துவரும் நாய்தான் - அது
மனிதர்க்குத் தோழனடி பாப்பா.

வண்டி இழுக்கும்நல்ல குதிரை - நெல்லு
வயலில் உழுதுவரும் மாடு,
அண்டிப் பிழைக்கும் நம்மைஆடு, - இவை
ஆதரிக்க வேணுமடி பாப்பா.

மகாகவி பாரதியார்

## பொருள் அறிக

| | | | |
|---|---|---|---|
| பால் | வால் | நெல் | வயல் |
| குழை | பொழி | இழு | உழு |
| பிழை | வயல் | ஆதரி | அண்டு |
| தோழன் | மனிதர் | வேண்டும் | |



# இன்பமாக உண்ணலாம்











வாழைக்காய் வேணுமா?
வறுவலுக்கு நல்லது.
கொத்தவரை வேணுமா?
கூட்டுவைக்க நல்லது.
பாகற்காய் வேணுமா?
பச்சடிக்கு நல்லது.
புடலங்காய் வேணுமா?
பொரியலுக்கு நல்லது.
தக்காளி வேணுமா?
சாம்பாருக்கு நல்லது.
இத்தனையும் வாங்கினால்,
இன்றே சமையல் பண்ணலாம்.
இன்றே சமையல் பண்ணலாம்.
இன்ப மாக உண்ணலாம்.

*குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா*

## எண்கள் 31-50

31. முப்பத்தி ஒன்று
32. முப்பத்தி இரண்டு
33. முப்பத்தி மூன்று
34. முப்பத்தி நான்கு
35. முப்பத்தி ஐந்து
36. முப்பத்தி ஆறு
37. முப்பத்தி ஏழு
38. முப்பத்தி எட்டு
39. முப்பத்தி ஒன்பது
40. நாற்பது
41. நாற்பத்தி ஒன்று
42. நாற்பத்தி இரண்டு
43. நாற்பத்தி மூன்று
44. நாற்பத்தி நான்கு
45. நாற்பத்தி ஐந்து
46. நாற்பத்தி ஆறு
47. நாற்பத்தி ஏழு
48. நாற்பத்தி எட்டு
49. நாற்பத்தி ஒன்பது
50. ஐம்பது

எண்கள்
ஐம்பது
வரை
பத்தின்
மடங்கு:
பத்து
இருபது
முப்பது
நாற்பது
ஐம்பது



அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்ப தில்லையே
இச்சகத்து ளோரெலாம்
எதிர்த்து நின்ற போதிலும்,
அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்பதில்லையே
துச்சமாக எண்ணி நம்மைத்
தூறு செய்த போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்பதில்லையே



இன்று குழந்தைகள் நீங்கள் – எனினும்
இனி இந்த நாட்டினை ஆளப்பிறந்தீர்!
நன்றாய்ப் படியுங்கள்! நாட்டின் குழந்தைகள்
ஒன்றாய் இருங்கள் உயர்வினை எண்ணுங்கள்
இன்று குழந்தைகள் நீங்கள் – எனினும்
இனி இந்த நாட்டினை ஆளப்பிறந்தீர்!